LI & FUNG

# வழங்குநர் நடத்தை விதி

லீ அண்டு ஃபங் (டிரேடிங்) லிமிடெட் (லீ அண்டு ஃபங்) நிறுவனத்தின் நடவடிக்கைகள், அதன் வாடிக்கையாளர்களின் சார்பாக, உலகம் முழுவதும் உள்ள வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் பொருட்களை நம்பியுள்ளன. பாதுகாப்பான வேலை நிலைமைகளை வளர்த்துக்கொள்வதற்காகவும், தொழிலாளர்களின் கண்ணியத்தையும் மரியாதையையும் பேணி வளர்ப்பதற்காகவும் மற்றும் பொறுப்புமிக்க சுற்றுச்சூழல் நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காகவும் நாம் நமது உலகளாவிய விநியோகத் தொடருடன் இணைந்து செயல்படுகிறோம்.

நமது வழங்குநர்கள் பின்பற்ற வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்ற கொள்கைகளையும் நடைமுறைகளையும் பற்றி நம்முடைய வழங்குநர் நடத்தை விதியும் மற்றும் அதனுடன் இணைந்த தரநிலைகளும் விவரிக்கின்றன. உள்ளூர், தேசியச் சட்டங்கள் / விதிமுறைகள், சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ஐஎல்ஓ) முக்கிய மாநாடுகள், மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த இந்த விதிகள், இவற்றை உயர்வாகக் கருதி தங்களுடைய செயல்பாடுகளுக்குள் இணைத்துக்கொண்ட வழங்குநர்களிடமிருந்து பொருட்களைப் பெறக்கூடிய நமது உறுதிப்பாட்டைக் குறிக்கின்றன.

பல்வேறு துறைகளில் உள்ள வழங்குநர்களின் ஊழியர்கள் பலதரப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட, வழங்குநர் நடத்தை விதியானது லீ அண்ட் ஃபங் நிறுவனத்தின் கொள்முதல் மற்றும் அதனோடு தொடர்புடைய பணியிடக் குடியிருப்பு வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து வேலைத்தளங்களுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

## மேலாண்மை அமைப்புகள்

- ஆபத்துக்கள் மற்றும் குறைபாடுகளை நிர்வகிப்பதற்காக கொள்கைகளையும் அமைப்புகளையும் வழங்குநர் மேலாண்மை ஏற்படுத்தியுள்ளது.

## உடல்நல மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள்

- உரிமங்கள், அனுமதிகள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவை சட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப துல்லியமாகவும், முழுமையாகவும், நாளது வரை புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. அனைத்து அறிவிப்புகளும் சட்ட ஒழுங்குவிதிகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- அவசரகாலச் செயல்பாடுகளுக்கும், மற்றும் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கும் பொருத்தமான பணியாளர்கள் பொறுப்பேற்றுள்ளனர்.
- சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அல்லது அதைவிட மேம்பட்ட அவசரகால மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை வழங்குநர் பயன்படுத்திப் பராமரிக்கின்றார்.
- வழங்குநர் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அல்லது அதைவிட மேம்பட்ட முதலுதவி மற்றும் மருத்துவக் கவனிப்பை வழங்குகின்றார்.
- சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அல்லது அதைவிட மேம்பட்ட விதத்தில் ஊழியர் மற்றும் தொழிற்சாலை விபத்துக்கள் குறித்து வழங்குநர்கள் பதிவு செய்கின்றனர், விசாரணை செய்கின்றனர் மற்றும் தீர்வு காண்கின்றனர்.
- தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி, விதி, பராமரிப்பு, மற்றும் பயன்பாடு ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- அடைபட்ட இடங்கள், மற்றும் மேல்நிலை மற்றும் நிலத்தடி சேமிப்பு (ஏஎஸ்டி மற்றும் யுஎஸ்டி) கொள்கைகள் மற்றும் பயிற்சி ஆகியவை வழங்கப்படுகின்றன.
- இரசாயன மற்றும் ஆபத்தான பொருட்களின் மேலாண்மை, கொள்கைகள், பயிற்சி, பராமரிப்பு, சேமிப்பு மற்றும் பயன்பாடு ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- புகைபிடித்தல் மற்றும் திறந்தநிலைச் சுடர், தீ அல்லது பற்றவைப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்டுள்ளன.
- உபகரணப் பாதுகாப்பு மேலாண்மை, கொள்கைகள், பயிற்சி மற்றும் பராமரிப்பு ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- மின்சாரக் கருவிகளும் அமைப்புகளும் முறையாகப் பராமரிக்கப்படுகின்றன.
- இரைச்சல் அளவுகள் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அல்லது அதைவிட மேம்பட்ட விதத்தில் வெளிச்சமான, காற்றோட்டமான மற்றும் வெப்பநிலைக் கட்டுப்பாடுள்ள ஒரு பணியிடத்தை வழங்குநர்கள் பராமரிக்கின்றனர்.
- சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற அல்லது அதைவிட மேம்பட்ட விதத்தில் தூய்மையான வேலைச் சூழ்நிலையை வழங்குநர்கள் பராமரிக்கின்றனர், மற்றும் குடிநீர், கழிப்பறை மற்றும் குளியலறை வசதியை வழங்குகின்றனர்.
- உணவுத் தயாரிப்புப் பகுதிகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பிடங்கள் ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- கட்டிட மற்றும் கட்டுமான அனுமதிகள் செம்மையாகப் பராமரிக்கப்படுகின்றன.
- வழங்குநர்கள் பணிச்சூழலியல் அபாயத் திட்டங்களைச் செயல்படுத்துகின்றனர், மற்றும் பணிச்சூழலியல் விழிப்புணர்வுப் பயிற்சி வழங்குகின்றனர்.
- தங்குமிட நிலைமைகள், மற்றும் அவசரகால மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.

LI & FUNG

## தொழிலாளர் நடைமுறைகள்

- வணிக உரிமங்கள் சட்ட நிபந்தனைகளுக்கேற்றவாறு சரியானவையாகவும், செல்லத்தக்கவையாகவும், நாளது வரை புதுப்பிக்கப்பட்டவையாகவும் உள்ளன. அனைத்து நியமனங்களும் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- பணிநியமன மற்றும் பணிநீக்க நடைமுறைகள் அனைத்தும் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன. நபர்கள் கடத்தப்படுகின்ற ஆபத்தைக் குறைப்பதற்கு வழங்குநர்கள் கடுமையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.
- ஊழியர் இழப்பீடு மற்றும் சம்பளப் பதிவேடு பராமரித்தல் ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- ஊழியருக்கான பலன்கள் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- ஊழியரின் வேலை நேரம் மற்றும் நேரப் பதிவேடு பராமரித்தல் ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- கட்டாய, கொத்தடிமை, ஒப்பந்த, அடிமைத்தன மற்றும் சிறைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.
- 15 வயதுக்கு உட்படாத சிறார்கள், தொழில் பழகுநர் மற்றும் பயிற்சி பெறுவோர் ஆகியோரைப் பணியமர்த்துவது சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றது அல்லது அதைவிட மேம்பட்டதாக உள்ளது.
- முறையற்ற பயன்பாடு, கட்டாயப்படுத்துதல், துன்புறுத்துதல் மற்றும் பொருத்தமற்ற ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.
- பாரபட்சம் காட்டுகின்ற நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேச்சுவார்த்தை நடத்துதல் ஆகியவற்றுக்கான உரிமைகள் மதிப்பளிக்கப்பட வேண்டும்.

## சுற்றுச்சூழல் நடைமுறைகள்

- சுற்றுச்சுழல் மேலாண்மை, கொள்கைகள் மற்றும் பணிநியமனங்கள் ஆகியவை சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவையாகவோ அல்லது அதைவிட மேம்பட்டவையாகவோ உள்ளன.
- வழங்குநர்கள் பாதகமான சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்க வேண்டும், கழிவுகளைக் குறைத்து மாசுபாடு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

## பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் நன்னெறி

- இணக்கத்தைச் சரிபார்ப்பதற்காகவும் அடையாளங் கண்டறியப்பட்ட இணக்கமின்மைகளின் முன்னேற்றத்தில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் வசதியிடத்துக்கான தடையற்ற அணுகலை வழங்குநர்கள் கொடுக்கின்றனர்.
- அனைத்து துணை ஒப்பந்த மற்றும் வீட்டுவேலை நடவடிக்கைகள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட வேண்டும், மற்றும் லீ அண்ட் ஃபங் நிறுவனத்திடமிருந்து மற்றும் / அல்லது அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வமான அங்கீகாரத்தை தொழிற்சாலை பராமரிக்க வேண்டும்.
- ஒரு லீ அண்ட் ஃபங் ஊழியர் அல்லது நியமிக்கப்பட்ட லீ அண்ட் ஃபங் பிரதிநிதி மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவது, இலஞ்சம் வாங்குவது அல்லது தேவையற்ற செல்வாக்குச் செலுத்துவது ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.